ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கொங்கலர்ந்த ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கொங்கலர்ந்த ॥

## திருவேங்கடம் - 1

‡கொங்கலர்ந்த மலர்க் குருந்தம்
ஒசித்த⋆ கோவலன் எம் பிரான்⋆
சங்குதங்கு தடங்கடல்⋆ துயில்
கொண்ட தாமரைக் கண்ணினன்⋆
பொங்கு புள்ளினை வாய் பிளந்த⋆
புராணர் தம் இடம்⋆ பொங்கு நீர்ச்
செங்கயல் திளைக்கும் சுனைத்⋆ திரு-
வேங்கடம் அடை நெஞ்சமே (1)

‡பள்ளி ஆவது பாற்கடல் அரங்கம்⋆
இரங்க வன் பேய் முலை⋆
பிள்ளையாய் உயிர் உண்ட எந்தை⋆
பிரான் அவன் பெருகும் இடம்⋆
வெள்ளியான் கரியான்⋆ மணி நிற
வண்ணன் என்றெண்ணி⋆ நாள் தொறும்
தெள்ளியார் வணங்கும் மலை⋆ திரு-
வேங்கடம் அடை நெஞ்சமே (2)

நின்ற மா மருதிற்று வீழ⋆
நடந்த நின்மலன் நேமியான்⋆
என்றும் வானவர் கை தொழும்⋆ இணைத்
தாமரை அடி எம் பிரான்⋆
கன்றி மாரி பொழிந்திடக்⋆ கடி-
தாநிரைக்கிடர் நீக்குவான்⋆
சென்று குன்றம் எடுத்தவன்⋆ திரு-
வேங்கடம் அடை நெஞ்சமே (3)

பார்த்தற்காய் அன்று பாரதம் கை செய்-
    திட்டு⋆ வென்ற பரஞ்சுடர்⋆
கோத்தங்காயர் தம் பாடியில்⋆ குரவை
    பிணைந்த எம் கோவலன்⋆
ஏத்துவார் தம் மனத்துள்ளான்⋆ இட-
    வெந்தை மேவிய எம் பிரான்⋆
தீர்த்த நீர்த் தடம் சோலை சூழ்⋆ திரு-
    வேங்கடம் அடை நெஞ்சமே (4)

வண் கையான் அவுணர்க்கு நாயகன்⋆
    வேள்வியில் சென்று மாணியாய்⋆
மண் கையால் இரந்தான்⋆ மராமரம்
    ஏழும் எய்த வலத்தினான்⋆
எண் கையான் இமயத்துள்ளான்⋆ இருஞ்
    சோலை மேவிய எம் பிரான்⋆
திண் கை ம்மா துயரி தீர்த்தவன்⋆ திரு-
    வேங்கடம் அடை நெஞ்சமே (5)

எண் திசைகளும் ஏழ் உலகமும்
    வாங்கிப்⋆ பொன் வயிற்றில் பெய்து⋆
பண்டோர் ஆல் இலைப் பள்ளி கொண்டவன்⋆
    பால் மதிக்கிடர் தீர்த்தவன்⋆
ஒண் திறல் அவுணன் உரத்துகிர்
    வைத்தவன்⋆ ஒள் எயிற்றொடு⋆
திண் திறல் அரியாயவன்⋆ திரு-
    வேங்கடம் அடை நெஞ்சமே (6)

பாரு நீர் எரி காற்றினொடு⋆
    ஆகாசமும் இவை ஆயினான்⋆
பேரும் ஆயிரம் பேச நின்ற⋆
    பிறப்பிலி பெருகும் இடம்⋆
காரும் வார் பனி நீள் விசும்பிடைச்⋆
    சோரு மா முகில் தோய் தர⋆

சேரும் வார் பொழில் சூழ்⋆ எழில் திரு-
வேங்கடம் அடை நெஞ்சமே (7)

அம்பரம் அனல் கால் நிலம்⋆ சலம்
ஆகி நின்ற அமரர் கோன்⋆
வம்புலா மலர்மேல்⋆ மலி மட
மங்கை தன் கொழுநன் அவன்⋆
கொம்பின் அன்ன இடை மடக் குற
மாதர்⋆ நீளிதணம்தொறும்⋆
செம் புனம் அவை காவல் கொள்⋆ திரு-
வேங்கடம் அடை நெஞ்சமே (8)

பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும்⋆
சொல்லி நின்று பின்னரும்⋆
பேசுவார் தமை உய்ய வாங்கிப்⋆
பிறப்பறுக்கும் பிரான் இடம்⋆
வாச மா மலர் நாறு வார் பொழில்⋆
சூழ் தரும் உலகுக்கெல்லாம்⋆
தேசமாய்த் திகழும் மலைத்⋆ திரு-
வேங்கடம் அடை நெஞ்சமே (9)

‡செங்கயல் திளைக்கும் சுனைத்⋆ திரு-
வேங்கடத்துறை செல்வனை⋆
மங்கையர் தலைவன் கலிகன்றி⋆
வண் தமிழ்ச் செஞ்சொல் மாலைகள்⋆
சங்கை இன்றித்தரித்துரைக்கவல்-
லார்கள்⋆ தஞ்சமதாகவே⋆
வங்க மா கடல் வையம் காவலர்
ஆகி⋆ வான் உலகாள்வரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥